IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.273/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | MANGAIYARKARSAN |
| FATHER'S NAME | : | MUTHUKARUKAN |
| VILLAGE | : | KOODUVANCHERI |
| OCCUPATION | : | MUNICIPAL COMMISSIONER |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23$^{th}$ day of March 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோபிசெட்டிபாளையத்தில் முனிசிபல் கமிஸ்னராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் கடந்த 19.03.2024 அன்று ஆஜர் எதிரிகள் இருவரும் RTI சம்பந்தமாக எனது அலுவலகத்திற்கு வந்திருந்தபோது தெரியும். பேர்ணாம்பட்டு டூ குடியாத்தம ரோட்டில் பொதுநிதியில் மழைநீர் வடிகால் அமைப்பதற்காக ஆக்கிரமிப்பு இடங்களை முறையாக அப்புறபடுத்தியதில் ஆஜர் எதிரிகள் இடமும் அப்பறபடுத்தபட்டதால் மேற்படி விவரம் சம்பந்தமாக ஆஜர் எதிரிகள் RTI தாக்கல் செய்திருந்தார்கள். கடந்த 19.03.2024 அன்று நான் அலுவலகத்தில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் மாலை 05.00 மணியளவில் எனது அலுவலகத்திற்கு வந்து அவர்கள் தாக்கல் செய்திருந்த RTIசம்பந்தமாக நான் சரிவர பதில் அளிக்கவில்லை என்று என்னிடம் கேட்டார்கள். நான் அவர்களிடம் ஏற்கனவே பதில் அனுப்பபட்டுவிட்டது, அனுப்பிய பதிலை குறை இருந்தால் குறிப்பிட்ட ஆணையத்தில் முறையிடும்படி சொன்னேன். ஆஜர் எதிரிகள் இருவரும் நான் சொன்ன பதிலை ஏற்றுக்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் என்னிடம் கேட்டுக்கொண்டே இருந்ததால் நான் அவர்களிடம் எனது செல்போன் நம்பரை கொடுத்து தற்போது அலுவலகத்தில் பணி ஆட்கள் இல்லாததால் கோப்புகளை பார்த்து பின்னர் தகவல் சொல்வதாக சொன்னேன். ஆஜர் எதிரிகள் மீண்டும் என்னிடம் வந்து என்னுடைய செல்போன் நம்பர் எனது பெயர் மங்கையர்கரசன் என்று காட்டாமல் True callerல் அரசு என்ற பெயரில் உள்ளது என்றும், ஏமாற்றுகிறேன் என்றும் சொல்லி என்னை சும்மா விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டினார்கள். பின்னர் நான் உடனே காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Page.No.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.273/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | NARASIMMAN |
| FATHER'S NAME | : | NARASIMMALU |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | JUNIOR ASSISTANT(MUNICIPALTY) |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23th day of March 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் முனிசிபலில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் கடந்த 19.03.2024 அன்று மாலை 05.30 மணியளிவல் ஆஜர் எதிரிகள் இருவரும் RTI சம்பந்தமாக கமிஸ்னரிடம் RTIக்கு சரியாக பதில் தரவில்லை என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். கமிஸ்னர் அவர்களிடம் முதலில் உட்காருங்கள் என்றும், RTI பிரிவு பார்த்தும் அலுவலர் தற்போது தேர்தல் பணி சம்பந்தமாக வெளியில் சென்று இருப்பதால் அவர் வந்த உடன் கோப்புகளை பார்த்துவிட்டு சொல்வதாக சொன்னார். அதற்கு ஆஜர் எதிரிகள் இருவரும் கமிஸ்னரின் செல் நம்பரை பெற்றுக்கொண்டு True caller–ல் அவருைடைய பெயர் அரசு என்று வருகிறது என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள். நான் என்னுடைய செல்போனை எடுத்து கமிஸ்னருடைய செல்போன் நம்பர் சரியாகதான் இருக்கிறது என்று சொன்னேன். ஆஜர் எதிரிகள் இருவரும் கமிஸ்னரிடம் மிரட்டுவதுபோல் பேசினார்கள். ஆஜர் 2வது எதிரி கமிஸ்னரை அடிக்க வந்தபோது நான் அவரை தடுத்து மற்ற அலுவலக ஊழியர்களை அழைத்தேன். பின்னர் கமிஸ்னர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார். போலிசார் வந்தவுடன் ஆஜர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டனர். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

STC.NO.273/2025

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | UMAPATHY |
| FATHER'S NAME | : | GANESAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | RI (MUNICIPALTY) |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 23th day of March 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் முனிசிபலில் Revenue Inspector ஆக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2024ம் வருடம் ஆஜர் எதிரிகள் கமிஸ்னர் அறையில் வந்து பிரச்சனை செய்தபோது தெரியும். கடந்த 19.03.2024 அன்று மாலை 05.00 மணிக்கு மேல் நான் அலுவலகத்தில் வேலையில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் கமிஸ்னர் அறையில் அவரை ஒருமையில் பேசும் சத்தம் கேட்டு அங்கு சென்று கேட்டபோது ஆஜர் எதிரிகள் இருவரும் எவ்வளவு சொல்லயும் கேட்காமல் RTIக்கு சரியாக பதில் தரவில்லை என்று கமிஸ்னரிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்து 1வது எதிரி கமிஸ்னரை அடிக்க முயன்றார். பின்னர் நாங்கள் அனைவரும் எடுத்து சொல்லியபோதும் ஆஜர் எதிரிகள் கேட்காமல் அரைமணி நேரம் பிரச்சனை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.